முதன்மை மாவட்ட நீதிமன்றம், புதுக்கோட்டை

வழக்கு எண். ஓ.எஸ். 9/2018

2019 ம் வருடம் செப்டம்பர் மாதம் 5 ம் நாள் வியாழக்கிழமை

பி டபிள்யூ. 1 என்பவரது வாக்கு மூலம் (1873 ம் வருடத்திய 10 வது விதியின்படி என்பவரால் ஆணையிடப்பட்டு பிரமாணம்
செய்யப்படுகிறது,

| | | | |
|---|---|---|---|
| பெயர் | லெட்சுமிபிரியா | தந்தைபெயர் | |
| கிராமம் | | தாலுகா | |
| சமயம் | | ஜாதி | |
| தொழில் | | வயது | |

தேதி : 5.9.2019

குறுக்கு விசாரணை

வழக்கு சொத்துக்கள் என்னுடைய தகப்பனாருக்கு பாத்தியப்பட்டது என்று நான் வழக்குரையில் சொல்லியிருக்கிறேன். திரும்ப கேட்கும்போது சாட்சி தன்னுடைய தாத்தாவிற்கு பாத்தியப்பட்டசொத்து என்று வழக்குரையில் குறிப்பிட்டதாகசொல்கிறார். தன்னுடைய தாத்தா பெயர் திருப்பதிசெட்டியார் என்றால் சரிதான். இந்த சொத்துக்கள் எல்லாம் அவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் தான். என் தாத்தாவிற்கு 2 ஆண்மக்கள் 4 பெண்மக்கள். இந்த சொத்துக்கள் என்னுடைய தகப்பனாரும் அவருடைய சகோதரரும் பாகப்பிரிவினை செய்துகொண்டதன் மூலமாக கிடைத்த சொத்துக்கள் என்று சொன்னால் சரிதான். என்னுடையஅத்தைகளுக்கு அந்த காலத்திலேயே சொத்துக்கள் கொடுக்கப்பட்டுவிட்டது.எனவே அவர்கள் கட்சி எதுவும் செய்யவில்லை. வழக்கு விவரங்கள் வழக்கறிஞருக்கு நான் தான் சொன்னேன். எனக்கு திருமணத்தின்போது எனக்கு எவ்வளவு நகைகள் போடப்பட்டது என்ற விவரத்தை நான் சொல்லியிருக்கிறேன். நான் என்னுடைய கணவரோடு பட்டுக்கோட்டையில் என்னுடைய பெற்றோருடன் நான் சேர்ந்து குடியிருக்கவில்லை. என்னுடைய கணவர் சேர்மார்க்கெட் தொழில் செய்து வருகிறார். அதில் அவருக்கு நஷ்டம் ஏற்பட்டது உண்மைதான். அதன் பிறகு என்னுடையபெற்றோரிடம் சென்று நான் பணம்கேட்டேன் என்று சொன்னால் அவ்வாறு எதுவும் கிடையாது. என்னுடைய தகப்பனாரோடு எனக்கு வாய்ப்பேச்சு கூடகுறைவாக பேச்சு வந்தது உண்மைதான். என்னுடைய தாயாரிடமும் நான் கோவித்துக்கொண்டது உண்மைதான். என்னுடைய கணவருக்கு தொழிலில் ஏற்பட்ட நஷ்டத்திற்கு என்னுடைய பெற்றோர் உதவி செய்யாததால் நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால்

தவறு. தாவாசொத்துக்களில் 27 கடைகளில் ஒவ்வொரு கடையிலும் யார் யார் வாடகைக்கு உள்ளார்கள் என்று தற்போது ஞாபகம் இல்லை. அந்த நபர்கள் யாரையும் தரப்பினராக வழக்கில் சேர்க்கவில்லை. 4ம் பிரதிவாதி என்னுடைய தாயாரை எதன் காரணமாக இந்த வழக்கில் சேர்த்துள்ளேன் என்று என்னுடைய வழக்குரையில் நான் சொல்லியிருக்கிறேன். நான் இவ்வாறு சொல்வது உண்மையல்ல என்றும் அப்படி ஏதும் சொல்லவில்லை என்று சொன்னால் தவறு. வாசாஆ.1 பற்றிய விவரமானது வழக்கிற்கு சற்று முன்பாகத்தான் எனக்கு தெரியவந்தது. வாசாஆ.1 என்னுடைய தகப்பனார் இந்த சொத்துக்களை பூர்வீக சொத்துக்கள் பற்றி சொல்லியிருக்கின்றாரா என்று கேட்டால் அவ்வாறு குறிப்பாக சொல்லவில்லை. ஆனால் பாகப்பிரிவினையில் என்று

.2.

சொல்லியிருக்கிறார். இந்த பாகப்பிரிவினையானது மேலே குறிப்பிடப்பட்ட என்னுடைய தகப்பனாரும்அவருடைய சகோதரருக்கும் இடையே ஏற்பட்ட 2001 பாகம் என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்ட பிறகு தான் காவல் துறை அதிகாரிகளுக்கும் சார்பதிவாளர் அவர்களுக்கும் மனுக்கள் கொடுத்தது உண்மைதான். அந்த ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. பதில் வழக்குரையில் பதில் அறிவிப்பிலும் சொல்லியிருப்பது போல எனக்கு செய்யவேண்டியவற்றை என் பெற்றோர் சரியாக செய்திருக்கிறார்கள் என்றும் நான்இந்த வழக்கை தேவையில்லாமல் தாக்கல் செய்துள்ளேன் என்றால் தவறு என்னுடைய திருமணமானது பெரியோர்கள் நிச்சயம் செய்யப்பட்டது. என்னுடைய மாமனாரும் என் தகப்பனாரும் என் திருமணத்தின்போது என்ன சீர் செய்யவேண்டும் என்று என்ன பேசிக்கொண்டார்கள் என்று எனக்கு தெரியாது. என்னுடைய சமூகத்தில் பெண்களுக்கு திருமணம் ஆகும்போது ஓரளவு சீர் செய்யப்படுவது உண்மைதான். அவ்வாறு செய்யப்பட்ட சீர்குறித்து எனக்கும் தெரியும் என்னுடைய மாமனாருக்கும் தெரியும். என்னுடைய வழக்குரையிலோ அல்லது என்னுடைய முதல்விசாரணை ஆவணத்திலோ எவ்வளவு சீர் செய்யப்பட்டது என்று குறிப்பாக சொல்லவில்லை. இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்ட பிறகு 3ம்பிரதிவாதி
3ம் நபர்களோடு ஒப்பந்தம் செய்துகொண்டார் என்ற ஆவணத்தை நான் தாக்கல் செய்துள்ளேன். என்னுடைய வழக்குரையில் கோரியபடி எனக்கு எவ்விதமான பாத்தியமும் கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் தவறு. தாவா சொத்துக்கள் என்னுடைய தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட தனி உரிமையுள்ள சொத்துக்கள் என்றும்அவர் உயிரோடு இருப்பதன் காரணமாக எனக்கு பாத்தியப்பட்டது அல்ல என்றால் தவறு. 4ம்பிரதிவாதி இந்த வழக்கிற்கு தேவையற்றவர் என்றும் அவருக்கு எதிராக வழக்கு தள்ளுபடிசெய்யப்படவேண்டும் என்று சொன்னால் தவறு, நான்கேட்டுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றும் வழக்கு தள்ளுபடிசெய்யவேண்டும் என்று சொன்னால் தவறு.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது
வழக்குநர் முன்னிலையில் சாட்சியின்
வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு
சொல்லப்பட்டு அவரால் கணினியில்
வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்துக்
காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு
சாட்சியால் சரி என ஒப்புக்கொங்ளளப்பட்டது.

முதன்மை மாவட்ட நீதிபதி,
புதுக்கோட்டை.